**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 29.10.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று, இந்திய விமானப் படையின் ரஃபேல் ரகப் போர் விமானத்தில், சுமார் 25 நிமிடங்களுக்கு பயணம் மேற்கொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், குஜராத் மாநிலத்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

ஜவுளித் துறையின் பிரச்சனைகளுக்கு, பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு தீர்வு காணும் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மோன்தா புயலால், புதுச்சேரியின் ஏனாம் பகுதியில் ஏற்பட்ட தாக்கங்களை, மாநில அரசுச் செயலர் திரு. கிருஷ்ணமோகன் உப்பு, இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**--------------------------------**

*முர்மு* (13)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று, ஹரியானா மாநிலம், அம்பாலா விமானப் படை தளத்தில் இருந்து, ரஃபேல் ரகப் போர் விமானத்தில், சுமார் 25 நிமிடங்களுக்கு ஒரு சுற்று, பயணம் மேற்கொண்டார். முன்னதாக இன்று காலை, விமானப் படை தளத்திற்கு வந்து சேர்ந்த அவருக்கு, சம்பிரதாய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. விமானப் படை தலைவர் திரு. ஏர் சீஃப் மார்ஷர் திரு. அமர்ப்ரீத் சிங். ஹரியானா மாநில கேபினட் அமைச்சர் திரு. அனில் விஜ், அம்பாலா நகர துணை ஆணையர் திரு. திரு. அஜய் சிங் தோமர்

உள்ளிட்டோர், குடியரசுத் தலைவரை வரவேற்றனர். குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, முப்படைகளின் தலைவர் என்ற முறையில், கடந்த 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், அசாம் மாநிலம் தேஜ்பூர் விமானப் படை தளத்தில் இருந்து, சுகோய்-30 ரகப் போர் விமானத்தில் பயணம் மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------------

மோடி குஜராத் 1 (6)

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், குஜராத் மாநிலத்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின் போது, நாளை கெவாடியா ஏக்தா நகரில் நடைபெற உள்ள விழாவில், மொத்தம் ஆயிரத்து 140 கோடி ரூபாய் மதிப்பில், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். பிரதமரின் குஜராத் பயணம் குறித்து கூடுதல் விவரங்கள்….

(வாய்ஸ்)

மோடி குஜராத் 2 (16)

(வாய்ஸ்)

குஜராத்தில், நாளை பிரதமர் தொடக்கி வைக்கும் திட்டங்களில், ராஜ்பிப்லா-பீர்சா முண்டா பழங்குடி பல்கலைக்கழகம், வாமன் விருக்ஷா வாட்டிகா என்னும் குள்ளமரத் தோட்டம் ஆகியன அடங்கும். நாளைய விழாவின் போது, 25 மின்சார பேருந்துகள், மற்றும், இப்பேருந்துகளுக்கான சார்ஜிங் மையத்தையும் பிரதமர் தொடக்கி வைக்கிறார். குஜராத்தில், இந்திய சாம்ராஜ்யங்கள் குறித்த அருங்காட்சியகம், மற்றும், விளையாட்டு வளாகம் அமைக்கும் பணிகளுக்கும், ஒற்றுமை சிலை வளாகத்தில் கிடைநிலை நகரும் தளம் அமைக்கும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

நாளை மறுநாள், சர்தார் பட்டேல் பிறந்தநாளன்று, தேசிய ஒற்றுமை தின கொண்டாட்டங்களில், பிரதமர் கலந்து கொள்கிறார். ஒற்றுமை தின உறுதிமொழி ஏற்பிலும், ஒற்றுமை தின அணிவகுப்பிலும், அவர் பங்கேற்கிறார். இவ்வாண்டு ஒற்றுமை தினப் பேரணியில், புகழ்பெற்ற

இந்திய நாய் ரகங்களை கொண்டு, எல்லைப் பாதுகாப்புப் படையினரால் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட மோப்ப நாய் படையின் அணிவகுப்பு, முக்கிய அம்சமாக இடம்பெற உள்ளது.

-------------------------------

*மோடி-ஆரிய மாநாடு* (12)

ஆரிய சமாஜத்தின் 150ஆம் ஆண்டு, மற்றும், மகரிஷி தயானந்த சரஸ்வதியின் 200ஆம் ஆண்டு பிறந்த நாளை ஒட்டி, ஆரிய சமாஜத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஞான ஜோதி திருவிழாவின் ஒருபகுதியாக, வரும் 31ஆம் தேதி புதுடெல்லியில் நடைபெற உள்ள சர்வதேச ஆரிய உச்சி மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு உரையாற்ற இருக்கிறார். கல்வி, சமூக சீர்திருத்தம், மற்றும், ஆன்மீக மேம்பாட்டில், ஆரிய சமாஜத்தின் 150 ஆண்டு சேவைகள் என்பது குறித்து, கண்காட்சி ஒன்றும் இம்மாநாட்டில் இடம்பெற உள்ளது. மகரிஷி தயானந்த சரஸ்வதியின் சீர்திருத்த லட்சியங்களையும், ஆர்ய சமாஜ் அமைப்பின் உலகளாவிய தாக்கங்களையும் பிரதிபலிக்கும் வகையில், இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள ஆர்ய சமாஜ் கிளைகளில் இருந்து, பிரதிநிதிகள் பலரும் மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

-------------------------------

*ஜிஎஸ்டி -மத்திய பிரதேஷ்*1 (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த செப்டம்பர் 22-ஆம் தேதி முதல் அமலாகி வரும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மத்திய பிரதேசத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறுகிறது என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி மத்திய பிரதேஷ் 2* (17)

**(வாய்ஸ்)**

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மத்திய பிரதேசத்தில், விவசாயிகள், வர்த்தகர்கள், மற்றும், கைவினைக் கலைஞர்களுக்கு முக்கிய பலன்கள் ஏற்பட்டுள்ளன. பல்வேறு துறைகளில், வரிக் குறைப்பு அறிவிக்கப் பட்டுள்ளதால், உற்பத்தி பொருட்களின் விலை குறைந்து, நுகர்வோரும், லாபம் அதிகரித்து, உற்பத்தியாளர்களும் பயன் பெறுகின்றனர். முக்கியமாக, மத்திய பிரதேசத்தின் இந்தூர் பகுதியில் உற்பத்தியாகும் பலவிதமான நொறுக்குத் தீனிகள் மீதான ஜிஎஸ்டி.12 சதவிகித அடுக்கில இருந்து, 5 சதவிகிதமாக மாற்றப் பட்டுள்ளது. இந்தூர் மற்றும் குவாலியர் பகுதகளில் அதிகமாக உற்பத்தியாகும் காலனிகள் மற்றும் இதர தோல் பொருட்கள் மீதான வரியும், 18-ல் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. டிராக்டர்கள், பம்பு செட்டுகள், மற்றும் இதர விவசாயக் கருவிகள் மீதான வரியும், வெறும் 5 சதவிகிதமாக மாறி உள்ளது. இதனால், விவசாயிகள், சிறு வியாபாரிகள், மற்றும், உற்பத்தியாளர்கள் பெருமளவில் ஊக்கம் பெற்றுள்ளனர். புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், மத்திய பிரதேசத்திலும், முக்கிய பொருட்களின் விலை குறைந்து, உள்ளூர் உற்பத்தி அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்பதில் ஐயமில்லை.

--------------------------------

*வானிலை 1 (18)*

வங்கக் கடலில் உருவாகி, நேற்றிரவு நரசப்பூர் அருகே, ஆந்திரா-ஏனாம் கரையை கடந்த மோன்தா தீவிரப் புயல், இன்று அதிகாலை புயலாகவும், பின்னர் ஆழந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும் வலுக் குறைந்து, தற்போது ஆந்திர பகுதிகளில் நிலவுகிறது. இது, வடக்கு-வடமேற்கு திசையில் மேலும் நகர்ந்து, அடுத்த 6 மணி நேரத்தில், காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுக் குறையக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நவம்பர் 4ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மீனவர்கள் இன்றைய தினம், தமிழக கடலோரப் பகுதிகளுக்கும், நாளை வரை, வங்கக் கடல் பகுதிகளுக்கும், நவம்பர் 2ஆம்

தேதி வரை, அரபிக் கடல் பகுதிகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே, ஆந்திரத்தை ஒட்டி உள்ள புதுச்சேரியின் ஏனாம் பகுதியில், புயல் காரணமாக நேற்று இரவு முதல் நிறுத்தி வைக்கப்பட்ட மின் வினியோகம், இன்று காலை முதல் கட்டம், கட்டமான முறையில் மீண்டும் தொடக்கப் பட்டது. ஆயினும், கிரியம்பேட்டா, சாவித்ரி நகர் உள்ளிட்ட இடங்களில், மின் வினியோகம் சீராக சற்று தாமதம் ஆகலாம்

*வானிலை* 2 (16)

என எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையே, புதுச்சேரி அரசின் நிதி மற்றும் வருவாய் துறை செயலர் திரு. கிருஷ்ணமோகன் உப்பு, இன்று ஏனாமில், கனக்காலப்பேட், மேட்டக்கூர், தரியல்திப்பா உள்ளிட்ட இடங்களில், புயலால் ஏற்பட்ட சேதங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். சாவித்ரி நகர் படகுத் துறை, கிரியம்பேட்டா பொறியியல் கல்லூரி, கோரிங்கா மதகு அணை உள்ளிட்ட இடங்களையும், அவர் நேரில் சென்று பார்வையிட்டார். சட்டமன்ற உறுப்பினர் திரு. கொல்லபள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக், உயர்கல்வித் துறை செயலர் திரு. அமன் ஷர்மா, ஏனாம் மண்டல நிர்வாக அதிகாரி திரு. அன்கித் குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர். தொடர்ந்து, ஏனாம் மண்டல நிர்வாக அதிகாரி அலுவலகத்தில், அனைத்துத் துறை அதிகாரிகளுடன் திரு. கிருஷ்ணமோகன் நடத்திய கூட்டத்திலும், மோன்தா புயலின் தாக்கங்கள் குறித்து ஆராயப்பட்டது. புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவ், இன்று ஏனாமில் நடத்திய செய்தியாளர் கூட்டத்தில், புயல் பாதிப்புகளுக்கு ஈடாக, புதுச்சேரி அரசு, ஏனாமில் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், தலா 5 ஆயிரம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

-------------------------------

*ராதாகிருஷ்ணன் (15)*

ஜவுளித் துறைக்கு சவாலாக உள்ள வர்த்தகத் தடைகள் பிரச்சனைக்கு, பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு தீர்வு காணும் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். ஜவுளித் துறையின் வரிச் சுமை பிரச்சனைகள் தொடர்பாக, அமெரிக்காவுடன் தற்போது நடைபெற்று வரும் பேச்சு வார்த்தைகள் குறித்தும், மத்திய தொழில்-வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல், தம்மிடம் எடுத்துக் கூறி இருப்பதாக, இன்று திருப்பூரில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசுகையில், குடியரசுத் துணைத் தலைவர் கூறினார். கடினமான சூழல்களுக்கு, பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காண்பதில், இந்திய தலைவரான பிரதமர் திரு. நரேந்திர மோடியைதான் உலகமே எதிர்நோக்குவதாக திரு. சி.பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார். தமது அரசியல் வாழ்க்கையின் ஆரம்ப நாட்களை அவர் நினைவு கூர்ந்து, பொது வாழ்வில் வெற்றிக்கு கடின உழைப்பு, மற்றும், அர்ப்பணிப்பு அவசியம் என்றும், இதில் அனைவருக்கும் முன்மாதிரியாக திகழ்பவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி என்றும் கூறினார்.

-------------------------------

*இ-விதான் மாநாடு (12)*

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3ஆவது தேசிய இ-விதான் மாநாடு, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. அனைத்து மாநிலங்கள், மற்றும், யூனியன் பிரதேசங்களின் சட்டமன்றங்களுக்கும் பொதுவான NeVA என்னும் தேசிய இ-விதான் செயலியின் முழுமையான அமலாக்கத்தில், இதுவரை எட்டப் பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும், எஞ்சியுள்ள சட்டமன்றங்களையும் இக்கட்டமைப்பில் கொண்டு வருவது குறித்தும், மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப்படும். செயற்கை நுண்ணறிவு மூலம், அனைத்து சட்டமன்ற செயல்பாடுகள், மற்றும், வழக்கமான நடைமுறைகளை வலுப்படுத்துவது குறித்தும், சட்டமன்றத்தின் செயல்பாடுகளில், வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துவது குறித்தும், முக்கிய விவாதங்கள் இடம்பெறும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------------------------

*சிம் கார்டு (9)*

மொபைல் சிக்னல் மூலம் செயல்படக் கூடிய ஐஓடி மற்றும் இதர தானியங்கி சாதனங்களுக்கான M2M சிம் கார்டுகளை, தொலைத் தொடர்பு சேவை நிறுவனங்களுக்கு இடையே, தடையின்றி மாற்றிக் கொள்வதற்கான விதிமுறைக் கட்டமைப்பை, மத்திய அரசு இறுதி செய்துள்ளது. சேவை துண்டிக்கப் படாமல், ஒரு நிறுவனத்தின் M2M சிம் கார்டை, மற்றொரு நிறுவனத்திற்கு மாற்றிக் கொள்ள, முறையான வழிமுறைகள் உருவாக்கப் பட்டுள்ளதால், வாடிக்கையாளர்களுக்கு மட்டுமின்றி, M2M சேவை வழங்கும் நிறுவனங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று, மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

--------------------------------

*ஆடவர் கிரிக்கெட் (7)*

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் தொடரில், கான்பெராவில் இன்று நடைபெற்ற முதலாவது 20 ஓவர் போட்டி, மழை காரணமாக பாதியிலேயே கைவிடப்பட்டது. மழையினால் ஏற்கனவே 18 ஓவராக குறைக்கப்பட்ட இப்போட்டியில், டாஸ் ஜெயித்த ஆஸ்திரேலிய அணியால், முதலில் ஆடப் பணிக்கப்பட்ட இந்திய அணி, போட்டி கைவிடப்படும் வரை, 9.4 ஓவர்களில், 1 விக்கெட் இழப்பிற்கு, 97 ரன் எடுத்து இருந்தது.

--------------------------------

*மகளிர் கிரிக்கெட் (6)*

உலகக் கோப்பைக்கான ஐசிசி மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடரில், இங்கிலாந்து-தென்னாப்ரிக்கா அணிகளுக்கு இடையே, இன்று குவஹாத்தியில் நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில், டாஸ் ஜெயித்த இங்கிலாந்து அணியால், முதலில் ஆடப் பணிக்கப்பட்ட தென்னாப்ரிக்க அணி, சற்று முன்வரை, ------ ஓவர்களில், ----- விக்கெட் இழப்பிற்கு, ---- ரன் எடுத்து இருந்தது.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று, இந்திய விமானப் படையின் ரஃபேல் ரகப் போர் விமானத்தில், சுமார் 25 நிமிடங்களுக்கு பயணம் மேற்கொண்டார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை முதல், குஜராத் மாநிலத்திற்கு, 2 நாள் பயணம் மேற்கொள்கிறார்.

ஜவுளித் துறையின் பிரச்சனைகளுக்கு, பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையிலான அரசு தீர்வு காணும் என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

மோன்தா புயலால், புதுச்சேரியின் ஏனாம் பகுதியில் ஏற்பட்ட தாக்கங்களை, மாநில அரசுச் செயலர் திரு. கிருஷ்ணமோகன் உப்பு, இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**